## 3.உதவி செய்!

கொக்கும் நாயும் நண்பர்களாக இருந்தனர்.
இருவரும் ஒற்றுமையாக இருந்தனர்.
ஒரு நாள் கொக்கின் குடும்பத்தில் ஒரு விருந்து.
அதற்கு நரியைக் கொக்கு அழைத்து இருந்தது.
விருந்தில் ஜாடிக்குள் சுவையான பணியாரங்கள் தரப்பட்டன.
ஜாடிக்குள் தலை விட்டுப் பணியாரத்தைச் சாப்பிட நாய் மிகவும் கஷ்டப்பட்டது.
இதைப் பார்த்த கொக்கு உடனே பணியாரங்களை ஒரு தட்டத்தில் வைத்துத் தந்தது.
நாய் மிகவும் சந்தோஷமாக சாப்பிட்டது.
பல நாட்களுக்குப் பின்னால்;
நாய் இருந்த வீட்டில் ஒரு தட்டில் பால்பாயாசம் ஊற்றி வைத்தனர்.
நாயும் கொக்கை அதைச் சாப்பிட அழைத்தது.
தட்டில் ஊற்றிய பாயாசத்தைக் கொக்கால் குடிக்க முடியவில்லை.
இதைப் பார்த்த நாய் தன் முன்கால்களால் தட்டத்தைத் தூக்கித் தன் பால் பாத்திரத்தில் ஊற்றியது.
அதைக் கொக்கு சந்தோஷமாகக் குடித்தது.